செ.வெ.எண்: 920/2016 நாள்: 30.12.2016

**பத்திரிகைச் செய்தி**

**கேலோ இந்தியா (KHELO INDIA) மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்**

-----

2016-2017-ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா (Khelo India) தேசிய திட்டத்திற்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதை முன்னிட்டு, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேர்வுப்போட்டிகள் 14 மற்றும் 17 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் தனி, தனியாக நடைபெறவுள்ளது.

06.01.2017 அன்று நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் வைத்து தடகளம், டேக்வாண்டோ, வாலிபால், பேட்மிண்டன், குத்துச்சண்டை, நீச்சல், மேஜை பந்து, கபாடி மற்றும் டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளுக்கான போட்டிகளும், 09.01.2017 அன்று பளுதூக்குதல் விளையாட்டுக்கான போட்டிகளும் நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் வைத்து நடைபெறவுள்ளது. போட்டிகளில் கலந்துக் கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.

மேலும் 07.01.2017 அன்று சைக்கிளில் கூடைப்பந்து, ரெஸ்லிங், ஜிம்னாஸ்டிக், கோ - கோ, வுஷூ (Wushu), கைப்பந்து (Handball), ஹாக்கி, கால்பந்து, வில்வித்தை மற்றும் ஜூடோ ஆகிய விளையாட்டுகளுக்கு தேர்வுப்போட்டிகள், நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் வைத்து நடைபெறவுள்ளது.

இதில் 14 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் கலந்துக் கொள்பவர்கள் 01.01.2003 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்தவராக இருத்தல் வேண்டும். 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் கலந்துக் கொள்பவர்கள் 01.01.2000 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

தடகளம், டேக்வாண்டோ, வாலிபால், பளுதூக்குதல், பேட்மிண்டன், குத்துச்சண்டை, நீச்சல், மேஜை பந்து, கபாடி மற்றம் டென்னிஸ் ஆகிய விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம் பெறுகிறவர்களுக்கு ரூ.350/-ம், இரண்டாம் இடம் பெறுகிறவர்களுக்கு ரூ.250/-ம், மூன்றாம் இடம் பெறுகிறவர்களுக்கு ரூ. 150/-ம் பரிசுத்தொகையாக வழங்கப்படும். இப்பரிசுத் தொகையினை சம்பந்தப்பட்ட வீரர் / வீராங்கனைகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியுள்ளதால், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக் கொள்பவர்கள் தங்களது வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க ஜெராக்ஸ் கொண்டு வருதல் வேண்டும். வங்கி கணக்கு இல்லாதவர்கள் வங்கிக் கணக்கு ஆரம்பித்து கணக்கு புத்தக ஜெராக்ஸ் எடுத்துவர வேண்டும். இவர்களுக்கான பரிசுத்தொகை Direct Benefit Transfer (DBT) முறையில் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். மேற்படி விளையாட்டில் கலந்துக் கொள்ளும் வீரர்கள் / வீராங்கனைகள் வயது சான்றிதழ் நகல் கண்டிப்பாக கொண்டு வருதல் வேண்டும்.

மேலும் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் வீரர் / வீராங்கனைகள் மாநில அளவிலான போட்டிகளுக்கும், மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் வீரர் / வீராங்கனைகள் தேசிய அளவிலான போட்டிகளுக்கும் அரசு செலவில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

எனவே போட்டிகளில் கலந்துக் கொள்ள விரும்பும் வீரர் / வீராங்கனைகள் மேலே குறிப்பிட்ட தேதிகளில் காலை 8 மணிக்கு நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்திற்கு வருகைதர தெரிவிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 04652 232060 என்ற தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமது செய்திக்குறிப்பில் தெரிவித்தார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.